1655. இந்தியாவில் கீழ்க்கண்ட எந்த பிரதேசத்தில் தரமான செம்மறி ஆடுகள் வளர்க்கப் படுகின்றன?

A) வடமேற்கு பகுதி

B) மித வெப்ப இமயமலைப் பகுதி

C) தெற்குப் பகுதியின் அரைப்பாலைவனப் பகுதி

D) ஈரப்பத கிழக்குப் பகுதி

(Group II – G2DT-2010)

1656. இந்துஸ்தான் கப்பல்கட்டும் தளம் எங்கு அமைந்துள்ளது?

A) விசாகப்பட்டிணம் B) சென்னை

C) கொச்சி D) மும்பை

(Group II – G2DT-2010)

1657. இந்தியாவில் எங்கு ஆசியாவின் மிகப்பெரிய தொலைநோக்கி அமைக்கப்பட்டுள்ளது?

A) டார்ஜிலிங் - மேற்கு வங்கம்

B) கொடைக்கானல் - தமிழ்நாடு

C) மகாபலீஸ்வர் - மஹாராஷ்ட்ரா

D) காவலூர் - தமிழ்நாடு

(Group I – RDGA-2010)

1658. இந்தியாவில் எந்த பிராந்தியத்தில் நிலத்தடி நீர்வளம் உருவாக ஏதுவாக உள்ளது?

A) கோந்துவானா படிவப்பாறை பிராந்தியம்

B) தக்காணப் பீடபூமி பிராந்தியம்

C) கங்கை-பிரம்மபுத்திரா வண்டல் பிராந்தியம்

D) செனஸொயிக் படிவுப்பாறை பிராந்தியம்

(Group I – RDGA-2010)

1659. இந்தியாவில் இரும்புத்தாது படிவுகள் காணப் படுவது

A) பைலடிலா B) டும்கூர்

C) தார்வார் D) பன்ஸ்வாரா

(Group I – RDGA-2010)

1660. இவற்றுள் கால்வாய் பாசனத்தினை அதிகம் பயன்படுத்தும் மாநிலம் எது?

A) குஜராத் B) ஒரிசா

C) உத்திரப்பிரதேசம் D) ஹரியானா

(Group I – RDGA-2010)

1661. வகைப்படுத்துதல் என்பது இடம் அல்லது அமைவிடம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும் எனில், அது .... வகைப்பாட்டியல் என அழைக்கப்படும்.

A) எண்ணின் அடிப்படையிலான

B) பூகோள ரீதியான

C) பண்பின் அடிப்படையிலான

D) கால வரிசையான

(Group I – RDGA-2010)

1662. தமிழ்நாட்டின் மிக உயரமான சிகரம்

A) ஆனைமுடி

B) தொட்டபெட்டா

C) சேர்வராயன் குன்றுகள்

D) கொடைக்கானல்

(Group I – RDGA-2010)

1663. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

பட்டியல்-I	பட்டியல்-II
a) கர்நாடகா	1. பாபுதான் குன்றுகள்
b) ஒரிசா	2. மயூர்பன்ச்
c) சட்டீஸ்கர்	3. பைலடிலா
d) ஜார்கண்ட்	4. போனை தொடர்

குறியீடுகள்:

	a	b	c	d
A)	1	2	3	4
B)	2	1	3	4
C)	1	2	4	3
D)	3	4	1	2

(Group I – RDGA-2010)

1664. மேலைக்கடல் என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்ட கடல்

A) அட்லாண்டிக் பெருங்கடல்

B) பசுபிக் பெருங்கடல்

C) இந்தியப் பெருங்கடல்

D) ஆர்டிக் பெருங்கடல்

(Group I – RDGA-2010)

1655 ... B 1656 .... A 1657 .... D 1658 .... C 1659 .... A 1660 .... C 1661 .... B 1662 .... B 1663 .... A 1664 .... A

1665. தெற்கு ஆசிய நாடுகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள நாடு எது?

A) இந்தியா B) பாகிஸ்தான்
C) நேபாளம் D) ஸ்ரீலங்கா

(Group I – RDGA-2010)

1666. கிழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று **(A)** : கடல்மட்ட வெப்பநிலையானது வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களால் கட்டுப் படுத்தப்படுகின்றது.

காரணம் **(R)**: வெப்ப நீரோட்டங்கள் வெப்ப நிலையினை அதிகரிக்கவும், அதேபோல் குளிர் நீரோட்டங்கள் வெப்ப நிலையினை குறைக்கவும் செய்கின்றது.

கிழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
C) (A) சரி, ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

(Group I – RDGA-2010)

1667. குதிரை குளம்பு போன்ற அல்லது வட்ட வடிவம் கொண்ட முருகைப் பாரின் பெயர்?

A) கங்கண வடிவ பார்கள்
B) கரை விலகிய பார்கள்
C) கரையோரப் பார்கள்
D) இவற்றுள் எதுவுமில்லை

(Group I – RDGA-2010)

1668. நிலம் ஒரு

A) மனிதனால் உருவாக்கப்பட்ட வளம்
B) புதுப்பிக்க இயலாத இயற்கை வளம்
C) புதுப்பிக்க இயலும் வளம்
D) இவை அனைத்தும்

(Group I – RDGA-2010)

1669. எமரால்டு அணை அமைந்துள்ள இடம்

A) கோயம்புத்தூர் B) ஊட்டி
C) ஈரோடு D) சேலம்

(Group I – RDGA-2010)

1670. ஹீலியோசென்டிரிக் தத்துவத்தின் படி சூரியன் மத்தியில் நிலையாக உள்ள போது மற்ற கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்த தத்துவத்தை முதன் முதலில் கூறியவர்

A) கலிலியோ B) நியூட்டன்
C) டாலமி D) கோப்பர்நிக்கஸ்

(Group I – RDGA-2010)

1671. இந்தியாவில் 2001-ம் ஆண்டு புள்ளி விவர கணக்கின் படி மக்கள் தொகை வளர்ச்சி

A) 3% B) 2.5% C) 1.9% D) 1.5%

(Group I – RDGA-2010)

1672. பின்வருவனவற்றுள் குன்றுகளின் சரியான வரிசை எது? (வடக்கிலிருந்து தெற்காக)

A) நல்ல மலை, நீலகிரி, ஜவாதி, ஆனைமலை
B) ஆனைமலை, ஜவாதி, நீலகிரி, நல்லமலை
C) நல்ல மலை, ஜவாதி, நீலகிரி, ஆனைமலை
D) ஆனைமலை, நீலகிரி, ஜவாதி, நல்லமலை

(Group I – RDGA-2010)

1673. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கிழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

பட்டியல்-I	பட்டியல்-II
a) நியோஜோயிக் காலம்	1. முதல்நிலை
b) செனோசிக் காலம்	2. இரண்டாம் நிலை
c) மிசோஜோயிக் காலம்	3. கால்நிலை
d) பேலியோஜோயிக் காலம்	4. மூன்றாம் நிலை

குறியீடுகள்:

	a	b	c	d
A)	3	4	2	1
B)	4	3	1	2
C)	2	1	4	3
D)	1	2	4	3

(Group I – RDGA-2010)

1665 ... A 1666 .... A 1667....... A 1668....... C 1669 .... B 1670....... D 1671 .... C 1672....... C 1673 .... A

1674. பின்வருவனவற்றுள் கருப்பு நிற மண் அதிகமாக காணப்படும் பிரதேசம்

A) கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருநெல்வேலி

B) சேலம், தர்மபுரி, நீலகிரி

C) புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் காவிரி டெல்டா

D) காவிரி டெல்டா, பாலாறு நீர்பிடிப்பு பகுதி மற்றும் பாண்டிச்சேரி

(Group I – RDGA-2010)

1675. தமிழ்நாட்டில், அதிக காடுகளைக் கொண்ட மாவட்டம் எது?

A) மதுரை B) கன்னியாகுமரி

C) சேலம் D) நீலகிரி

(Group I – RDGA-2010)

1676. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:

கூற்று (A) : திடீரென நகரும் புவி ஒட்டினால் அல்லது புவியதிர்வினால் சுனாமி உருவாகிறது.

காரணம் (R) : சிஸ்மிக் (புவியதிர்வு) கடலலைகள் ஒத அலைகள் என தவறுதலாக அழைக்கப் படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) தவறு, ஆனால் (R) சரி

(Group I – RDGA-2010)

1677. கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

வகைகள்	% பரப்பு (இந்தியா)
I. மலைகள்	- 10.6
II. பீடபூமிகள்	- 27.7
III. சமவெளிகள்	- 43.2
IV. குன்றுகள்	- 18.5

இவற்றில் :

A) I மட்டும் சரியானது

B) I மற்றும் II சரியானவை

C) I, II மற்றும் III சரியானவை

D) அனைத்தும் சரியானவை

(Group I – RDGA-2010)

1678. நாட்டின் மொத்தப் போக்குவரத்தில் தரைவழிப் போக்குவரத்து

A) 20% B) 40%

C) 60% D) 80%

(Group I – RDGA-2010)

1679. இமயமலையின் வடகிழக்கு பகுதி 300 செ.மீ அதிகமாக மழை பெற காரணமாக இருக்கும் கிளை

A) வங்காள விரிகுடா கிளை

B) அரபிக்கடல் கிளை

C) காம்பே வளைகுடா கிளை

D) கொங்கன் கிளை

(VAO – KALI - 2011)

1680. இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பரப்பளவின் அடிப்படையில் தமிழ்நாடு .... இடத்தை வகிக்கிறது.

A) பதினொன்றாவது B) இரண்டாவது

C) மூன்றாவது D) ஏழாவது

(VAO – KALI - 2011)

1681. 2001ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, இந்திய மக்கள் தொகை

A) 1.027 பில்லியன் B) 1.037 பில்லியன்

C) 1.047 பில்லியன் D) 1.057 பில்லியன்

(VAO – KALI - 2011)

1682. ஆண்டிஸ் மலைத்தொடர் அமைந்துள்ள இடம்

A) வட அமெரிக்கா B) ஆசியா

C) தென் அமெரிக்கா D) ஆஸ்திரேலியா

(VAO – KALI - 2011)

1683. தலா வருமானத்தில் முதலிடம் வகிக்கும் மாநிலம்

A) ஒரிஸா B) பீஹார்

C) பஞ்சாப் D) குஜராத்

(VAO – KALI - 2011)

1674 ....A 1675 .... D 1676..... B 1677.....D 1678 ....D 1679.... A 1680.....A 1681.... A 1682.... C 1683.... C

1684.......... நதிக்கரையில் அதிக அளவில் சணல் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

A) கோசி B) ஹூக்ளி
C) தபதி D) சிந்து

(VAO – KALI - 2011)

1685. இந்தியாவின் முதல் முழு கல்வியறிவு பெற்ற மாவட்டம்

A) நெல்லூர், ஆந்திரபிரதேசம்
B) எர்ணாகுளம், கேரளா
C) கோலார், கர்நாடகா
D) காஞ்சிபுரம், தமிழ்நாடு

(VAO – KALI - 2011)

1686. சேலம், நாமக்கல், தருமபுரி, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூரில் பாய்கின்ற ஆறு

A) வைகை B) காவிரி
C) தாமிரபரணி D) செய்யாறு

(VAO – KALI - 2011)

1687. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப் படுவது எது?

A) சென்னை B) மும்பை
C) டெல்லி D) சேலம்

(VAO – KALI - 2011)

1688. புவியின் அச்சு .... சாய்ந்துள்ளது

A) 90° B) 66½°
C) 23½° D) 23°

(VAO – KALI - 2011)

1689. நீலகிரி மலையில் உள்ள முக்குருத்தி தேசிய பூங்கா ....க்கான சரணாலயம் ஆகும்.

A) புலி B) மயில்
C) சிறுத்தை D) சிங்கம்

(VAO – KALI - 2011)

1690. கருப்பு பருத்தி மண் அதிக அளவில் காணப்படுகின்ற மாவட்டம்

A) சேலம் B) தருமபுரி
C) கோயம்புத்தூர் D) சென்னை

(VAO – KALI - 2011)

1691. கடலோரங்களில் உடைந்து சிதறுகிற அலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) அலைகள் B) வெள்ளைத் தொப்பிகள்
C) நுரைதிரள் D) அலை அரிமேடை

(VAO – KALI - 2011)

1692. மிகத் துல்லியமாக வரைபடங்களை பெரிதாக்கவும் சிறியதாக்கவும் உதவும் சாதனம்

A) சோனோகிராப் B) பேன்டோகிராப்
C) ஸ்பெக்ட்ரோகிராப் D) தெர்மோகிராப்

(VAO – KALI - 2011)

1693. இந்தியாவில் முதன் முதலாக அணுமின் நிலையம் அமைந்த இடம்

A) நரோரா B) கல்பாக்கம்
C) தாராபூர் D) கைகா

(Forest Apprentice – GSIX - 2011)

1694. பட்டியல் I (தமிழ்நாட்டில் உள்ள நீர்வீழ்ச்சிகளை) பட்டியல் II (இருப்பிடத்துடன் அதன் மாவட்டத்தை) பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

பட்டியல்-I	பட்டியல்-II
தமிழ்நாடு நீர்வீழ்ச்சி	இருப்பிடம்/மாவட்டங்கள்
a) வெள்ளி நீர்வீழ்ச்சி	1. திருநெல்வேலி
b) திற்பரப்பு நீர்வீழ்ச்சி	2. தேனி
c) சுருளி நீர்வீழ்ச்சி	3. திண்டுக்கல்
d) அகஸ்தியர் நீர்வீழ்ச்சி	4. கன்னியாகுமரி

குறியீடுகள்:

	a	b	c	d
A)	1	3	2	4
B)	2	1	3	4
C)	3	4	2	1
D)	4	3	1	2

(Forest Apprentice – GSIX - 2011)

1695. பின்வருபனவற்றுள் தமிழக பழங்குடியினர் வகையினரை சேராதவர் யார்?

A) தோடர் B) நாகர்
C) குரும்பர் D) பனியன்

(Forest Apprentice – GSIX - 2011)

1696. தேக்கு மரங்கள் இக்காடுகளில் காணப் படுகின்றன.

A) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்
B) அயன மண்டல் இலையுதிர் காடுகள்
C) அகன்ற இலைக் காடுகள்
D) உபஅயன மண்டல இலையுதிர்க் காடுகள்

(Forest Apprentice – GSIX - 2011)

1684 ....B 1685 .... B 1686..... B 1687..... B 1688 .... C 1689.... A 1690..... C 1691.... B 1692.... B 1693.... C
1694 .... C 1695 .... B 1696..... B

1697. தென் இந்தியாவில், கோடை மழை என்பது

A) மாம்பழ தூறல்

B) மேற்காற்று இடையூறுகள்

C) தீவிரமான தலப்புயல்

D) நார்வெஸ்டர்

(Forest Apprentice - GSIX - 2011)

1698. அதிகளவு பருத்தி விளைவிக்கும் மாவட்டம்

A) பெரம்பலூர் B) விருதுநகர்

C) சேலம் D) மதுரை

(Forest Apprentice - GSIX - 2011)

1699. ஆனைமுடி சிகரத்தின் உயரம் .... ஆகும்

A) 2352 மீ B) 2652 மீ

C) 2442 மீ D) 2333 மீ

(Forest Apprentice - GSIX - 2011)

1700. எத்தனை சதவீத குழந்தை மக்கட்தொகை ஊட்டச்சத்துக் குறைவால் அவதிப் படுகிறார்கள்?

A) 10% B) 7%

C) 3% D) 46%

(Forest Apprentice - GSIX - 2011)

1701. மாநிலத்தின் வறண்ட தென்மேற்குப் பகுதியில் கால்நடைகளின் பரவல் குறைவாக உள்ளது. ஏனெனில்

A) குறைவான தொழில்நுட்ப வளர்ச்சி

B) கால்நடைகளுக்கு சாதகமற்ற சுற்றுச்சூழல் நிலை

C) பால் மற்றும் பால் பொருட்களுக்கான குறைவான தேவை

D) மக்களின் குறைவான வாங்கும் திறன்

(Forest Apprentice - GSIX - 2011)

1702. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : வண்டல் மண் என்பது வளமான மண்.

காரணம் (R) : அவை இரும்பு, கால்சியம், கண்ணாம்பு, மெக்னீசியம் மற்றும் பொட்டாஷ் கொண்டவை.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி

B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

C) (A) தவறு, ஆனால் (R) சரி

D) (A) சரி, ஆனால் (R) தவறு

(Forest Apprentice - GSIX - 2011)

1703. காசிரங்கா தேசிய பூங்கா எங்கு அமைந்துள்ளது?

A) அஸ்ஸாம் B) குஜராத்

C) மேற்கு வங்காளம் D) உத்தராஞ்சல்

(Forest Apprentice - GSIX - 2011)

1704. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

பட்டியல்-I (இந்திய மண்)	பட்டியல்-II (சதவீதம்)
a) வண்டல் மண்	1. 43%
b) செம்மண்	2. 18%
c) கரிசல் மண்	3. 15%
d) பாலைவன மண்	4. 4%

குறியீடுகள்:

	a	b	c	d
A)	3	1	2	4
B)	2	3	1	4
C)	4	3	2	1
D)	1	2	3	4

(Forest Apprentice - GSIX - 2011)

1705. "டெட்ராய்ட்" - எதற்கு புகழ் பெற்றது?

A) ஆட்டோமொபைல் தொழில்

B) திரைப்படத் தொழில்

C) தகவல் தொழில்நுட்பம்

D) விவசாயத் தொழில்

(Gr.IV (Special Test) - SAMU - 2011)

1706. கோள்களின் இயக்கங்களை எதன் ஈர்ப்பு விசை கட்டுப்படுத்துகிறது?

A) சூரியன் B) புவி

C) நிலவு D) நட்சத்திரங்கள்

(Gr.IV (Special Test) - SAMU - 2011)

1707. இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம்

A) பஞ்சாப் B) ராஜஸ்தான்

C) ஆந்திரப்பிரதேசம் D) ஒரிஸ்ஸா

(Gr.IV (Special Test) - SAMU - 2011)

1697 ....A 1698 .... C 1699..... B 1700..... B 1701 ....B 1702.... D 1703 .....A 1704.... D 1705.... A 1706 ....A 1707 ....A

1708. உலகின் மிக ஆழமான 'மரியானா அகழி' அமைந்துள்ள பெருங்கடல்
A) பசிபிக் பெருங்கடல்
B) அட்லாண்டிக் பெருங்கடல்
C) ஆர்டிக் பெருங்கடல்
D) இந்தியப் பெருங்கடல்
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1709. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

பட்டியல்-I	பட்டியல்-II
a) மைசூர்	1. சர்க்கரை ஆலை
b) உத்திரபிரதேசம்	2. கம்பளி ஆடை
c) பெங்களூர்	3. பட்டு ஆடை
d) தாரிவால்	4. மின் சாதன பொருட்கள்

குறியீடுகள்:

	a	b	c	d
A)	3	1	4	2
B)	1	2	3	4
C)	2	1	4	3
D)	3	1	2	4

(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1710. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உற்பத்தியை இந்தியா ஒரு சில ஆண்டுகளில் முந்தக்கூடிய வேளாண் உற்பத்திப் பொருள்
A) நெல் B) கோதுமை
C) சிறு தானியங்கள் D) தோட்டப் பயிர்கள்
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1711. கீழே கொடுக்கப்பட்டுள்ளதில் எது சரியாக பொருத்தப்பட்டுள்ளது ?
A) மத்திய இரயில்வே - 'மும்பை மண்டலம்
B) கிழக்கு இரயில்வே - சென்னை மண்டலம்
C) வடக்கு இரயில்வே - கோரக்பூர் மண்டலம்
D) தெற்கு இரயில்வே - மாலிகான் மண்டலம்
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1712. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் கல்வியறிவு பெற்றவர்களின் சதவீதம்
A) 60.5% B) 73.5%
C) 80.5% D) 77.5%
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1713. தூத்துக்குடியின் மறுபெயர்
A) வைர நகர் B) முத்து நகர்
C) பொன் நகர் D) நிலக்கரி நகர்
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1714. உலகம் இன்று ஒரு கிராமமாக இயங்குவதற்கு காரணம்
A) பசுமைப்புரட்சி
B) தகவல் தொடர்புப் புரட்சி
C) நீலப்புரட்சி
D) தொழிற்புரட்சி
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1715. சட்லஜ் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை
A) பக்ரா நங்கல்
B) ஹிராகுட்
C) தாமோதர் அணை
D) ஸ்டான்லி நீர்த்தேக்கம்
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1716. இந்தியாவில் காணப்படும் மலைச்சிகரங்களில் மிக உயர்ந்தது
A) எவரெஸ்ட் B) கஞ்சன் ஜங்கா
C) K_2 D) தவளகிரி
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1717. அலைகளினால் கடலோரங்களின் அடித்தளம் அரித்து எடுக்கப்படுவதால் முதலில் உருவானவை
A) டோம்போலோ B) செங்குத்தான சரிவு
C) நீரடி மண் கரை D) கடற் குகை
(சரியான விடை : ஓங்கல்கள்)
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1718. முக்கூடலில் சேரும் ஆறுகள்
A) மணிமுத்தாறு, கோரையாறு, பாண்டியாறு
B) வழுதா நதி, சண்முக நதி, வராக நதி
C) தண் பொருனை, சிற்றாறு, கோதண்டராம ஆறு
D) வைகை, பொருனை, தாமிரபரணி
(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1708 .... A 1709 .... A 1710..... B 1711 ..... A 1712 .... B 1713.... B 1714 ..... B 1715 .... A 1716 .... C 1717 .... *
1718 C

1719. ஓசோன் படலம் இதை உறிஞ்சுகிறது

A) மீத்தேன் B) குளோரின்
C) புறஊதா கதிர்கள் D) காஸ்மிக் கதிர்கள்

(Gr.IV (Special Test) – SAMU - 2011)

1720. இந்தியாவின் சதுப்பு மண் ....ன் கடற்கரையில் காணப்படுகிறது

A) ஆந்திர பிரதேசம் B) ஒரிஸா
C) கர்நாடகா D) குஜராத்

(Group – I A – THOL - 2011)

1721. தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு சரிவு பகுதிகளில் குறைவான மழை பெறுவதற்கு காரணம்

A) மழை தரும் மேகங்கள் இல்லாமை
B) காற்று மறைவு இருப்பிடம்
C) அதிகமான காற்று இடைவெளி
D) மாறுபட்ட உயரங்கள்

(Group – I A – THOL - 2011)

1722. கடலடி நிலத்தோற்றங்களை ஆழம் அடிப்படையில் வரிசைப்படுத்துக :

A) சரிவு, திட்டு, உயர்வு, ஆழி, கண்டம்
B) கண்டம், திட்டு, உயர்வு, சரிவு, ஆழி
C) கண்டம், திட்டு, சரிவு, உயர்வு, கடலடி சமவெளி
D) கண்டம், திட்டு, கடல்அடி சமவெளி, உயர்வு, திட்டு

(Group – I A – THOL - 2011)

1723. சீரான கோளக் கூட்டினுள்

A) ஈர்ப்பு மின்னழுத்தம் சுழியாகும்
B) ஈர்ப்பு புலம் சுழியாகும்
C) ஈர்ப்பு மின்னழுத்தம் எல்லா இடங்களிலும் சமம்
D) ஈர்ப்பு புலம் எல்லா இடங்களிலும் சமமாக இருக்கும்

(Group – I A – THOL - 2011)

1724. பாலாறு ஆற்றின் துணை ஆறு .... ஆகும்

A) சின்னாறு B) செய்யாறு
C) மார்கண்ட நதி D) வன்னியாறு

(Group – I A – THOL - 2011)

1725. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : இந்தியக் காலநிலை அயன பருவக்காற்றால் உண்டாக்கப் படுகிறது.

காரணம்(R) : இமயமலை வடக்கில் அமைந்திருப்பது பருவக்காற்று ஏற்பட ஒரு காரணமாகும்.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) சரி, (R) தவறு
B) (A) மற்றும் (R) சரி
C) (A) தவறு ஆனால் (R) சரி
D) (A) மற்றும் (R) தவறு

(Group – I A – THOL - 2011)

1726. உலகில் அதிக அளவில் மைகாவை உற்பத்தி செய்யும் நாடு எது?

A) ஜெர்மனி B) பாகிஸ்தான்
C) இந்தியா D) ஜப்பான்

(Group – I A – THOL - 2011)

1727. இந்திய காலநிலையானது .... தன்மையுடையது

A) அயனமண்டல B) உப அயனமண்டல
C) பருவகாற்று D) சவான்னா

(Group – I A – THOL - 2011)

1728. மாநிலத்திலேயே மிகப்பெரிய முறைப்படுத்தப் பட்ட தொழிற்பிரிவு எது?

A) மீன்பிடிப்புத் தொழில்
B) ஜவுளித் தொழில்
C) கனிம தொழில்
D) குடிசைத் தொழில்

(Group – I A – THOL - 2011)

1729. கொடுக்கப்பட்டுள்ள இணைகளிலிருந்து சரியான விடையை தேர்ந்தெடுக்க :

A) SAIL - சேலம்
B) TNPL - ஒசூர்
C) TATA - கரூர்
D) BHEL - தஞ்சாவூர்

(Group – I A – THOL - 2011)

1719 ....C 1720 .... B 1721 ..... A 1722 ..... D 1723 .... C 1724 .... B 1725 ..... A 1726 .... C 1727 .... C 1728 .... C 1729 ....A

1730. மழைபெறும் அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களை ஏறுமுகமாக வரிசைப்படுத்து :

I. மேற்குக் கடற்கரை
II. மேற்கு மத்தியப் பிரதேசம்
III. உத்தரகண்ட்
IV. இராஜஸ்தான்

இவற்றுள் :

A) IV, II, III, I　B) IV, III, II, I
C) III, II, IV, I　D) IV, I, II, III

(Group – I A – THOL - 2011)

1731. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

பட்டியல்-I	பட்டியல்-II
a) ஜாவர்	1. இரும்புத்தாது
b) கேத்ரி	2. பாக்சைட்
c) ரேனுகூட்	3. காப்பர்
d) சிங்பும்	4. துத்தநாகம்

குறியீடுகள்:

	a	b	c	d
A)	1	2	3	4
B)	4	2	3	1
C)	3	4	2	1
D)	4	3	2	1

(Group – I A – THOL - 2011)

1732. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பளவு

A) 1.3 லட்சம் சதுர கி.மீ
B) 2.1 லட்சம் சதுர கி.மீ
C) 3.1 லட்சம் சதுர கி.மீ
D) 1.4 லட்சம் சதுர கி.மீ

(Group – II – WAKA - 2011)

1733. கென்லி-ஹெவிசைடு அடுக்கு .... ல் உள்ளது

A) மெசோஸ்ஃபியர்　B) ட்ரோபோஸ்ஃபியர்
C) ஐயனோஸ்ஃபியர்　D) ஸ்ட்ராடோஸ்ஃபியர்

(Group – II – WAKA - 2011)

1734. அமில மழை உருவாக காரணம்

A) நீர் மாசுபாடு　B) ஒலி மாசுபாடு
C) காற்று மாசுபாடு　D) நில மாசுபாடு

(Group – II – WAKA - 2011)

1735. புவியின் வயது உத்தேசமாக

A) 4.5 பில்லியன் வருடங்கள்
B) 1.8 பில்லியன் வருடங்கள்
C) 2250 மில்லியன் வருடங்கள்
D) 1950 மில்லியன் வருடங்கள்

(Group – II – WAKA - 2011)

1736. பூமி சுழல்வதை நிறுத்தினால், அதன் பரப்பின் மேல் g யின் தோற்ற மதிப்பு

A) எல்லா இடத்திலும் அதிகரிக்கும்
B) எல்லா இடத்திலும் குறையும்
C) எல்லா இடத்திலும் சமமாக இருக்கும்
D) சில இடங்களில் அதிகரித்தும் மற்றும் சில இடங்களில் சமமாகவும் இருக்கும்

(Group – II – WAKA - 2011)

1737. தளக்கோள்கள் என்பவை

A) புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய்
B) வெள்ளி, புவி, செவ்வாய் மற்றும் வியாழன்
C) வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன்
D) புவி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி

(Group – II – WAKA - 2011)

1738. கீழே கொடுக்கப்பட்ட எந்த ஒரு ஜோடி சரியாக பொருந்தவில்லை?

A) மணல் பாறைகள் - கடலூர்
B) தெரி மணல் - தர்மபுரி
C) சுண்ணாம்புப் பாறை - அரியலூர்
D) வண்டல் - தஞ்சாவூர்

(Group – II – WAKA - 2011)

1739. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

பட்டியல்-I	பட்டியல்-II
a) போடிநாயக்கனூர்	1. செயற்கைபட்டு
b) சின்னமனூர்	2. ஏலக்காய்
c) உசிலம்பட்டி	3. புகையிலை
d) கம்பம்	4. பிஸ்கட்

குறியீடுகள்:

	a	b	c	d
A)	4	2	1	3
B)	4	3	2	1
C)	3	1	4	2
D)	1	4	3	2

(Group – II – WAKA - 2011)

1740. பசிபிக் பேராழியின் ஆழமான பகுதி

A) மரியானா அகழி　B) டோங்கா அகழி
C) பிலிப்பைன்ஸ் அகழி　D) குரிலே அகழி

(Group – II – WAKA - 2011)

1741. உலகிலேயே பெரிய சூரிய சக்தி ஆலை எங்கு உள்ளது?

A) ஸ்பெயின்　B) போர்ச்சுக்கல்
C) ஐரோப்பா　D) ரஷ்யா

(Group – II – WAKA - 2011)

1730 ....B 1731 ....D 1732..... A 1733..... C 1734 .... C 1735.... A 1736..... A 1737.... A 1738.... B 1739 C
1740 ....A 1741 .... B

1742. மிக அதிகமான கனிம வளத்தைக் கொண்டிருப்பது

A) ஒரிஸ்ஸா B) மகாராஷ்ட்ரா
C) அஸ்ஸாம் D) தமிழ்நாடு

(Group – II – WAKA - 2011)

1743. புவியின் சராசரி அடர்த்தி

A) 5.517 g cm^{-3} B) 11 g cm^{-3}
C) 3 g cm^{-3} D) 3.5 g cm^{-3}

(Group – II – WAKA - 2011)

1744. ரூர்கேலா உருக்காலை கீழ்க்கண்ட ஒன்றின் உதவியுடன் துவக்கப்பட்டது?

A) யு.எஸ்.எஸ்.ஆர் B) மேற்கு ஜெர்மனி
C) யு.கே D) யு.எஸ்.ஏ.

(Group – II – WAKA - 2011)

1745. தமிழ்நாட்டில், NH 47 நெடுஞ்சாலை

A) சேலம் முதல் கன்னியாகுமரி வரை
B) மதுரை முதல் இராமேஸ்வரம் வரை
C) நாகப்பட்டினம் முதல் கோயம்புத்தூர் வரை
D) சென்னை முதல் திண்டுக்கல் வரை

(Group – II – WAKA - 2011)

1746. பெரும்பாலான மாவட்டங்களில் தமிழ்நாட்டில் குடும்பத் தொழிலாக தொடர்ந்து இருந்து கொண்டு இருப்பது

A) காகிதத் தொழில் B) கைத்தறித் தொழில்
C) தீப்பெட்டித் தொழில் D) பீடித்தொழில்

(Group – II – WAKA - 2011)

1747. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

பட்டியல்-I	பட்டியல்-II
a) பனியாறு	1. குடக்குழி
b) நிலத்தடி நீர்	2. சர்க்கு
c) ஆறு	3. இன்ஸெல்பர்க்
d) காற்று	4. லாப்பீஸ்

குறியீடுகள்:

	a	b	c	d
A)	2	4	1	3
B)	1	2	3	4
C)	3	2	4	1
D)	4	3	2	1

(Group – II – WAKA - 2011)

1748. தமிழ்நாடு அதிகப்படியாக உற்பத்தி செய்யும் பொருள்

A) சூரியகாந்தி B) வெங்காயம்
C) பருத்தி D) கரும்பு

(Gr.I) – IDPC - 2011)

1749. விலங்கின எலும்புகளினாலான மண் வகை காணப்படுவது

A) விந்திய மலைகளின் மணற்பாறைகள் மற்றும் லடாக் மாக்கல் பாறை
B) தென்மேற்கு ராஜஸ்தான் மற்றும் கடப்பாப் பிரதேசம்
C) தெலுங்கானா, தமிழ்நாடு கடற்கரை மற்றும் கொங்கு பிரதேசம்
D) பங்குரா, மெட்னிப்பூர் மற்றும் பர்கானா பகுதிகள்

(Gr.I) – IDPC - 2011)

1750. தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் அதிக பங்கு வகிப்பது

A) விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறை
B) தொழில்துறை
C) சேவைத்துறை
D) துறைசாரா

(Gr.I) – IDPC - 2011)

1751. டைபூன்கள் எங்கு பெரும்பாலும் காணப்படும்?

A) கிழக்கு பசிபிக் B) மேற்கு பசிபிக்
C) கருங்கடல் D) செங்கடல்

(Gr.I) – IDPC - 2011)

1752. சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கோள்?

A) பூமி B) வியாழன்
C) சனி D) வெள்ளி

(Gr.I) – IDPC - 2011)

1753. சூழ்மண்டலத்தில் மறுசுழற்சி ஆகாதது எது?

A) தண்ணீர் B) கார்பன்
C) நைட்ரஜன் D) ஆற்றல்

(Gr.I) – IDPC - 2011)

1754. தமிழ்நாட்டில் எங்கு துரித போக்குவரத்து முறை அமைந்துள்ளது?

A) சேலம் B) திருச்சி
C) சென்னை D) தஞ்சாவூர்

(Gr.I) – IDPC - 2011)

1742 ....A 1743 .... A 1744..... B 1745..... A 1746 ....B 1747.... A 1748.... D 1749.... A 1750.... C 1751 ....B
1752 ....B 1753 .... D 1754..... C